முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண் 229/2018

பி.வா.சா.1– கிருஷ்ணகுமாரி

15–09–2022 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு எனது வழக்கறிஞர் தயார் செய்தார். வாதி வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதிகளை எனது சிறு வயதிலிருந்து தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு சுமார் 12 வயதிருக்கும் சமயத்தில் தான் வாதிகளை நான் தெரிந்து கொண்டேன். பொதுவாக ஜாதகங்கள், நாள் குறிப்பு ஆகியவை கணினிப் பொறியில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்ற விவரம் எனக்கு தெரியும். அவ்வாறு என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 01–07–1966 நாளுக்குண்டான குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் முறையே **வா.சா.ஆ.14** ஆகும். (பிரதிவாதி தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது)

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஆனி மாதம் 17 ம் நாள் எனக் கண்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் காலை 6 மணி முதல் 8 மணி வரை எனக் கண்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.14 ன்படி அன்றைய தினத்தில் நல்ல நேரம் காலை 9–15 மணி முதல் காலை 10–15 வரை என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மனோகரி என்பவரின் தகப்பனார் பெயர் ராமசாமி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மனோகரி என்பவரின் முன்எழுத்து ஆங்கில வார்த்தை ஆர் என்பதற்கு பதிலாக பி என தவறாக உள்ளது என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள ராமசாமி என்பவர் பற்றிய விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மணமகன் ஊர் திருச்சூர் ஆட்டுர் எனக் கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் திருச்சூர் அட்டுர் எனக் கண்டுள்ளது என்றால் சரிதான். ஆகவே பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஊர் பெயர் தவறாக கண்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் திருச்சூர் அஞ்சல் அலுவலக விவரங்கள் அடங்கிய ஆவணம் **வா.சா.ஆ.15** ஆகும். (பிரதிவாதி தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது)

பி.வா.சா.ஆ.1 ஆவணம் எந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டது என்ற விவரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அதேபோல் மேற்கண்ட ஆவணத்தில் முகூர்த்தம் மணமகன் வீட்டில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதுகுறித்து மேல் விவரங்கள் எதுவும் இடம் பெறவில்லை என்றால் சரிதான். எனது தாயாரின் ஊர் கம்பம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள 01–07–1966 என்ற தேதி வா.சா.ஆ.14 ன்படி முகூர்த்த தேதியே இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் அது சரியல்ல.

எனது பிரமாண வாக்குமூலத்தில் தேனி மாவட்டம், கம்பத்தில் குடித்தனம் நடத்தி வந்தோம் என்பதை நிரூபணம் செய்ய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனது பிறந்த தேதி 09–12–1981 என்பதை நிரூபணம் செய்ய எனது தரப்பில் என்னுடைய பிறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர் உரையில் எனது தாயாரின் திருமண தேதி மற்றும் நான் பிறந்த தேதி ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது தாயாரும் தகப்பனாரும் தங்களது கடின உழைப்பினால் தான் தாவா சொத்தை வாங்கியதாக நான் குறிப்பிட்டுள்ள நிலையில் அவர்களுடைய வருமானத்தை குறிக்கும் பொருட்டு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் கூலி வேலை தான் செய்தார்கள்.

எனது தாயார் என்ன வேலை செய்தார்கள் என்றால் 1995 ம் ஆண்டிலிருந்து பின்னலாடை நிறுவனத்தில் செக்கிங்காக வேலை பார்த்து வந்தார். கம்பத்தில் இருந்த சமயத்தில் காட்டு வேலைக்கு சென்று வந்தார். எனது தாயார் பணியாற்றிய கம்பெனியின் பெயர் எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது சுவாதீனத்தில் இருந்ததற்கு நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் காலை எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் செக்குபந்தி மற்றும் விஸ்தீரணம் ஆகிய விவரங்கள் எனக்கு தெரியாது. அ.வ.எண் 3/2019 வழக்கு கோப்புகளை நான் இந்த வழக்கில் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை.

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் எனது தகப்பனார் மற்றும் வாதி தனலட்சுமி மற்றும் நான் உள்ளோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எனது தாயாரும் இருக்கிறார். இந்த புகைப்படம் முறையே **வா.சா.ஆ.16** ஆகும். எனக்கும் வாதிகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு பேச்சு வார்த்தை இல்லை அதற்கு முன்னால் சந்தித்தால்

பேசிக் கொள்வோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் 2,3 வாதிகள் மற்றும் நான் உள்ளோம். இந்த புகைப்படம் முறையே **வா.சா.ஆ.17** ஆகும். இந்த புகைப்படம் எப்போது எடுக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.16 புகைப்படத்தில் வாதி தனலட்சுமியின் மகன் பாண்டியன் இடம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் புகைப்படம் 2ம் வாதி சசிகலாவின் மகள் பூப்பு நன்னீராட்டு விழாவில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகைப்படம் முறையே **வா.சா.ஆ.18** ஆகும். வாதி வீட்டு அருகில் இருந்ததால் அவர்களுடைய விழாவிற்கு நாங்கள் குடும்பமாக சென்றிருந்தோம். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாய்மாமன் இல்லாததால் எனது தகப்பனார் தான் சீர் செய்தார் என்றால் சரியல்ல. 3ம் வாதி தனலட்சுமி கிருஷ்ணா நகரில் குடியிருக்கிற விவரம் எனக்கு தெரியும். அந்த சொத்தின் ஒரு வீட்டில் தான் தனலட்சுமி குடியிருந்தார் என்றால் சரியல்ல. அவர் 5 ஆண்டுகளுக்கு முன்பு வாடகைக்கு தான் குடியிருந்தார். எனது பிரமாண வாக்குமூலத்தில் 1ம் வாதி கம்பத்தில் குடியிருந்ததாக சொல்லி உள்ளேன். அவர் குடியிருந்த முகவரி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

எனது பெற்றோர் வாதிகளுக்கு பல்வேறு உதவிகள் செய்ததாக சொல்லி உள்ளேன். குறிப்பிட்டு என்ன உதவி என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் பாண்டியன் என்பவரின் காதணி விழா அழைப்பிதழ் என்றால் சரிதான். அந்த அழைப்பிதழ் முறையே **வா.சா.ஆ.19** ஆகும். வா.சா.ஆ.19 ல் சித்தி சித்தப்பா என்ற இடத்தில் எனது கணவர் மற்றும் எனது பெயர் உள்ளது என்றால் சரிதான். காலம் சென்ற ராகவன் என்பவர் 3ம் வாதியின் வீட்டில் தான் காலமானார் என்றால் அது சரியல்ல. ராகவன் உயிருடன் இருந்த சமயத்தில் எங்கள் அனைவரையும் ஒருதாய் பிள்ளைகளாக பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. உண்மையில் ராகவனின் முதல் மனைவி வாதி தங்கம்மாள் தான் என்று சொன்னால் அது சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் முதல் மனைவி ஆவார். எனது தாயார் ராகவனுக்கு 2ம் மனைவி என்று சொன்னால் அது சரியல்ல.

ராகவன் எனது தகப்பனார் என்பதைக் காட்ட எனது தரப்பில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ராகவனுக்கு எனது தாயார் தான் முதல் மனைவி என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகளும், 1,2 பிரதிவாதிகளும் காலம் சென்ற ராகவனின் வாரிசுகள் என்று உத்தரவு பிறப்பித்தால் அதை ஏற்க எனக்கு சம்மதமா என்றால் இல்லை. இறந்த ராகவனுக்கு நான் மற்றும் 1ம்

பிரதிவாதி ஆகியோருக்கு வாரிசுகள் என்று காண்பிக்க வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்காக விண்ணப்பம் அளிக்கப்பட்டது. அந்த விண்ணப்பத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வட்டாட்சியர் இறந்த ராகவனுக்கு 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் மனைவிகளாக இருக்கிறார்கள் என்று குறிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்து நான் ஆஜரான பின்பு தான் மேற்கண்ட குறிப்பு பற்றி தெரிந்து கொண்டேன். இதற்கு பின்னிட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியருக்கு ஏதேனும் ஆட்சேபணை அளித்தேனா என்றால் இல்லை. வாதிகள் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது எனது தாயாரின் தூண்டுதலின்பேரில் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K VIGNESMADHU

Digitally signed by K VIGNESMADHU
Date: 2022.09.15 16:30:44 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்